REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மாசி 25உ புதன் (9—3—55) ★ ★ வெளியீடு: மாசி 26உ வியாழன் (10—3—55) [இதழ் 228

பார்மோசா பிரச்சினை: ஈடன் தரும் பரிகாரம்

"பார்மோசா பகுதியில் போர் நிறுத்தம் ஏற்பட்டு கரையோரத் தீவிலிருந்து சியாங் தரப்பினர் வெளியேறினால், பின்பு, ஐ. நா. சபையில் கம்யூனிஸ்டு சீனாவைச் சேர்ப்பது குறித்தும், பார்மோசாவின் எதிர்காலம் குறித்தும் சர்வதேச அடிப்படையில் பரிகாரம் காணலாம்," என்று, பிரிட்டிஷ் வெளி விவகார இலாகா மந்திரி ஈடன், பிரிட்டிஷ் மக்கள் சபையில் அறிவித்திருக்கிறார்.

'பிற கட்சியினரை காங்கிரசில் சேர்க்க முயற்சிப்பது விரும்பக்கூடியதல்ல'

'பேரம் பேசுவதற்கு இடமளிக்கக்கூடாது'

'காங்கிரஸ் போக்கு உயர்வாக இருக்க வேண்டும்'

காங்கிரஸ் மரபுக்கு மாறான பண்டிதரின் செயல்முறை!

"பிற கட்சியினரைத் தம் கட்சியில் சேர்க்க மேற்கொள்ளும் முயற்சி விரும்பத்தக்கதல்ல; இதுபோன்ற விஷயங்களில் காங்கிரஸ் கட்சி உயர்வாக நடந்துகொள்ள வேண்டும்; இத்துறையில் பேரம் பேசுவதற்கு காங்கிரஸ் இடமளிக்கக்கூடாது."

"ஆனால், ஒரு மனிதன் தனது கருத்தை மாற்றிக்கொள்ளவும், அதன் பிறகு தனது கட்சியைக்கூட மாற்றிக்கொள்ளவும்கூடும்; போதிய ஆராய்ச்சிக்குப் பிறகு காங்கிரசில் நுழைபவர்களை, காங்கிரஸ் சேர்த்துக்கொள்ள வேண்டும்."

மேற்கூறிய கருத்தை, மக்கள் சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர்களான பி. எஸ். மூர்த்தி, கே. சூரியநாராயணா ஆகிய இருவரையும், காங்கிரஸ் மக்கள் சபை கட்சியில் சேர்த்துக்கொண்டபோது, காங்கிரஸ் தனித் தலைவரான பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் கூறியுள்ளார்.

ஆந்திரத் தேர்தல் முடிவு

கர்னூல், மார்ச் 8—

ஆந்திர மாநில சட்ட சபைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலின் முடிவுகள் முழுவதும் வெளியாகி விட்டன.

196 இடங்களில் காங்கிரஸ் ஐக்கிய முன்னணி 146 இடங்களைப் பெற்றுள்ளது.

இதில் காங்கிரஸ் கட்சி 119, கிருஷிக்லோக் கட்சி 22, பிரஜா கட்சி 5 என்று இடங்களைப் பிரித்துக் கொண்டிருக்கின்றன.

கம்யூனிஸ்டு கட்சியினர் 15 இடங்களை மட்டுமே பெற்று அதிர்ச்சி தரத்தக்க வகையில் தோல்வி கண்டு, கலங்கிப் போய் இருக்கின்றனர்.

மக்கள்-சோஷலிஸ்டுகள் 13 இடங்களை மட்டும் பெற்று திருப்தியடைந்துள்ளனர்.

சுயேச்சைகள் 22 இடங்களைக் கைப்பற்றி இருக்கின்றனர்.

முன்னைய சட்ட சபையில் இடம் பெற்றிருந்தோரில் ஏழு கம்யூனிஸ்டுகள் மட்டுமே திரும்பவும் இந்தத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர்.

காங்கிரஸ் முன்னணியில், பிரஜா கட்சித் தலைவரான தென்னேட்டி விசுவநாதத்தின் தோல்வியைத் தவிர வேறு குறிப்பிடத் தகுந்த தோல்விகள் எதுவும் இல்லாததும், கம்யூனிஸ்டுகள் தரப்பில் தோழர்கள் இராஜேஸ்வர ராவ், நாகி ரெட்டி, பாசவ புன்னையா, அனுமந்தராவ் போன்ற பல குறிப்பிடத் தகுந்த தலைவர்கள் தோல்வி கண்டிருப்பதும், நடைபெற்ற ஆந்திரத் தேர்தலில், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

மேலும், 'கம்யூனிஸ்டுகளின் கோட்டை' என அவர்களால் வர்ணிக்கப்பட்டுவந்த கோதாவரி, கிருஷ்ணா மாவட்டங்களில் அவர்கள் பெற்ற மாபெரும் தோல்விகள் அவர்களுக்கே அதிர்ச்சியைத் தந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

பெரும்பான்மை இடங்களைப் பிடித்து வெற்றி பெற்றுள்ள காங்கிரஸ், மந்திரி சபை அமைப்பது குறித்து தீவிரமாக காரியங்களைத் துவக்கியுள்ளது என்றும் தெரிகிறது

அகில இந்தியத் தலைவர்கள் ஒரே மனதுடன் கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கச் செய்யப் பிரயத்தனம் செய்கிறார்களாம்.

இதற்கிடையில் டெல்லியிலிருந்து சென்னை திரும்பியுள்ள காமராசர், ஆந்திராவில் தோழர் டி. பிரகாசம் காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார் எனவும், அவரது நீண்டகால சேவையை எண்ணி அவருக்கு வேறு கௌரவமான வேலை தரப்படக்கூடும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

உறுதிப்படுத்தப்படாத செய்திகள், கோபால் ரெட்டி கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படலாமெனவும், திரு பிரகாசத்திற்கு 'பென்ஷன்' தரப்படலாமெனவும் கூறப்படுகிறது.

'உழவர்களுக்கு இனமாக நிலமளிக்கக்கூடாது'

'நிலத்தின் விலையை நீண்டகாலத் தவணைகளாகப் பெறவேண்டும்'

"நிலப்பிரபுக்களிடமிருந்து நிலத்தைப் பெறுவது இலகுவாகும்; அவர்களுக்குத் தகுந்த நஷ்டஈடு கொடுத்துவிட முடியும், இனமாக உழவர்களுக்கு நிலம் கொடுக்கக்கூடாது; அதற்காக; சுலபமாக நீண்டகாலத் தவணைகளில் அவர்கள் விலை கொடுக்க வேண்டும்; அதுவுமன்றி, நாள் ஒன்றுக்கு எட்டு மணி நேரம் நிலத்தில் வேலை செய்ய அவர்களைக் கட்டாயப்படுத்த வேண்டும்."

—இவ்வாறு மைசூர் பிரதேச காங்கிரஸ் தலைவர் எஸ் சென்னையா ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டுள்ளார்.

பெல்லாரியில் எங்கு சென்றாலும், மைசூரையும் உள்ளடக்கி கர்நாடக மொழி மாநில ஏற்பாட்டைக் குறித்துத் தனது கருத்தை அங்குள்ளவர் அறிய ஆர்வம் கொண்டனர் என்றும், அந்தக் கூட்டத்தில் சென்னையா கூறினார்.

நடுத்தர ஆலைத் துணி விற்பனை வரி மசோதா

உயிர் பெறாது டில்லியில் ஊசலாடுகிறது!

மத்திய அரசாங்கத்துடன் பேசவில்லை என காமராசர் கைவிரிப்பு!

கைத்தறித் துணிக்கு உதவி—பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்துடன் ஆச்சாரியார் ஆட்சியிலிருந்த காலத்தில், நடுத்தர ஆலைத் துணி மீது ரூபாய்க்கு 0—1—3 அணா விதம் 'ஒரு கட்ட' விற்பனை வரி போடப்பட்டது. அதற்கான தனி வரி மசோதா சென்னை சட்டசபையில் நிறைவேறி ஏறத்தாழ ஓராண்டும் ஆகிறது; இன்னும் அதற்கு ஒப்புதல் தந்து சட்டமாக்க இந்தியப் பேரரசின் தலைவர் முன்வரவில்லை.

அதற்குப்பின் சென்னை சட்டசபையால் நிறைவேற்றப்பட்ட சில மசோதாக்களுக்கு அதிலும் குறிப்பாகக் கடந்த பதினைந்து தினங்களுக்கு முன் நிறைவேற்றப்பட்ட விவசாயக் கடன் நிவாரண மசோதாவும், இந்தியப் பேரரசு தலைவரின் உயிர் தானத்தைப் பெற்று சட்டமாகிவிட்டன; ஆனால், நடுத்தர ஆலைத் துணி மீது விதிக்கப்பட்ட 0—1—3 அணா விற்பனை வரி மசோதா மட்டும், தலைவரால் உயிரளிக்கப்படாமல், டெல்லியில் உள்ள தலைவர் மாளிகை நுழைவு வாயிலில் தேங்கிக் கிடக்கிறது.

இதுபற்றி டெல்லி சென்று திரும்பியுள்ள காமராசரிடம், 'இந்தியப் பேரரசின் அமைச்சர்களோடு கலந்து பேசினாரா?' எனக் கேட்கப்பட்டது.

'பேசவில்லை' என தம்மியல்புப்படி ஒரே சொல்லில் கச்சிதமாகக் கூறிவிட்டார், கனம்.

வரி ஆய்வுக் குழுவின் சிபாரிசுகளை எதிர்நோக்கியிருப்பதால்தான் மேற்படி மசோதா ஒப்புதல் பெறாமல் இருக்கிறதென்று தனக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததாகவும், மேற்படி குழுவின் சிபாரிசுகள் வெளிவந்த பின்னர் உள்ள நிலைமை தனக்குத் தெரியாது என்றும், கனம் மேலும் விளக்கம் தந்துள்ளார்.

கிருஷிக் லோக் கட்சியின் முடிவு

புதுடில்லி, மார்ச் 8—

கிருஷிக் லோக் கட்சித் தலைவரான திரு என். ஜி. ரங்கா, தனது கட்சி காங்கிரசில் உடனடியாகச் சேர்ந்து விடுவது என இன்று முடிவு செய்திருப்பதாக அறிவித்திருக்கிறார்.

நீண்ட நாட்களாகவே காங்கிரசில் சேர்ந்துவிட வேண்டும் என்ற எண்ணம் தம் கட்சியில் நிலவி வந்திருந்த போதிலும், நாட்டில் இன்று உருவாகியுள்ள சூழ்நிலைகளும், ஆந்திரத் தேர்தல் முடிவுகளும் அந்த எண்ணத்தைச் செயலாக்கத் துரிதப்படுத்தின என்றும் அவர் பத்திரிகையாளரிடம் குறிப்பிட்டிருக்கிறார்.

தணிக்கை!

இந்திய சினிமாப் படங்கள் கோவாவில் இப்போது தணிக்கை செய்யப்படுகின்றன என்று கூறப்படுகிறதாம்!

கிராமவாசிகள் மீது துப்பாக்கி பிரயோகம்

கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க முயன்றனராம்!

விருதுநகர், மார்ச் 8—

கடந்த ஞாயிறு இரவு அருப்புக்கோட்டை வட்டத்தைச் சேர்ந்த நாரகுளம் கிராமத்தில், திருச்சுழி மதுவிலக்கு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் தாசன் என்பவர் சில போலீசாருடன் சென்று சோதனை நடத்தினர். குடிவெறியிலிருந்ததாகக் கூறப்படும் சிலரை அங்கு கைது செய்தார்.

அந்தக் கிராமவாசிகள் கைதானவர்களை விடுவிப்பதற்கு முயற்சிக்கவே, தற்பாதுகாப்பை முன்னிட்டு போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று செய்தி வெளியாகியுள்ளது.

தகவல் தெரிந்ததும் இராமநாதபுரம் மாவட்ட போலீஸ் அதிகாரி இடத்திற்கு விரைந்து விசாரணை நடத்தி வருகிறாராம்.

தொழிற்கட்சியில் தகராறு!

பெவான் வெளியேற்றப்படுவார்!

பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் இடதுசாரித் தலைவர் அனூரின் பெவான் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு தொழிற்கட்சியின் பார்லிமெண்டரி போர்டுக்கு, வலதுசாரித் தலைவர்கள் (அட்லி குழுவினர்) வருகிற வாரத்தில் சிபாரிசு செய்வர்.

பல சந்தர்ப்பங்களில் கட்சி விதிகளை மீறி கட்சியில் பிளவுண்டாக்கியதாக பெவான் மீது அட்லி குழுவினர் குற்றஞ் சுமத்துவராம்.

இப்போது தொழிற்கட்சியில் அட்லி குழுவினருக்கே ஆதிக்கம் இருக்கிறது.

சேரமாட்டோம்!

இப்போது தாய்லாந்துக்கு வருகை தந்துள்ள பர்மியப் பிரதமர் தாக்கின்-நு, "தமது நாடு, தென் கிழக்கு ஆசிய பாதுகாப்பு ஒப்பந்தத்தில் (சீட்டோ) சேர்வது சாத்தியமல்ல," என்று குறிப்பிட்டிருக்கிறது.

இது போதுமா?

லட்சுமணபுரி, மார்ச் 8—

பிரபல இந்திய யோகியான தேவ ராவா பாவா என்பவர், உதவி ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணனுக்கு "பிரம்மரிஷி!" என்ற பட்டத்தை ஏப்ரல் மாதம் 17-ந் தேதியன்று பகல்பூரில் அளிப்பார் என்ற செய்தி வெளிவந்துள்ளது.

தேவையில்லை!

உணவுப் பண்டங்களை உதவுவதற்கு முன்வந்த அமெரிக்காவின் யோசனையை, கம்யூனிஸ்டு சார்பு நாடான அல்பேனியா நிராகரித்து விட்டதாம்; 'இது உள்நாட்டு விவகாரங்களில் தலையிடும் யோசனையாகும்,' என்று அல்பேனியா கருதுகிறதாம்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 9—3—55 புதன்

பஞ்சாபைப் பின்பற்றி?

நெய்வேலி பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுத்துத் தொழில்படுத்தினுல், திராவிடத்தின் மின்சார உற்பத்தியைப் பெரிய அளவில் கூட்டக்கூடும். மின்சாரப் பெருக்கத்தினுல், மின்சாரத்தைப் பெருது இருக்கும் கிராமங்கள் பலவற்றை மின்சார மயமாக்க முடியும்.

மின்சாரப் பெருக்கம், மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கத் துணை செய்யும். கட்டணக் குறைவு, மேலும் பலரை மின்சாரத்தைப் பயன்படுத்தத் தூண்டுதல் அளிக்கும்.

நீர்த் தேக்கங்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம், தேக்கத்தில் நீர் குறைகிற பொழுது உற்பத்தி குறைந்தும், நீர் கூடுகிற பொழுது உற்பத்திக் கூடுவதுமான ஒரு தொல்லை உண்டு. இம்மின்சார குறைதல் கூடுதலுக்கேற்ப, மின்சாரத்தை நம்பி இருக்கும் விவசாயமும், தொழில்களும் குறையவும், கூடவும் ஏற்படும். இந்த நெருக்கடி, நெய்வேலி மின்சார திட்டத்திற்கு அறவே கிடையாது. எப்பொழுதும் ஒரே அளவு மின்சாரம் கிடைத்துக்கொண்டு இருக்கும்.

மின்சாரத்தைப் பெருக்கும் வகையில் மேற்கொள்ள வேண்டிய பெரிய அளவு நீர் தேக்கத் திட்டங்கள் இனி சென்னை மாநிலத்தில் கிடையாது; ஏற்கனவே அத்தகைய திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்தப் பட்டு விட்டன என்று கூறப்படுகிறது. இவ்வியற்கைக் குறைபாட்டைக் கொண்டு நோக்கும்பொழுது, நெய்வேலி பழுப்பு நிலக்கரியைக் கொண்டு மின்சார உற்பத்தியைப் பெருக்க வேண்டியதின் கட்டாயம் கூடுதலாகிறது. அதன் மதிப்பும் உயருகிறது.

அதே நிலைக்குக் கொஞ்சமும் குறையாத அளவில், நெய்வேலி பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் ஏற்பாட்டை இந்தியப் பேரரசிடம் ஒப்படைத்துவிட்ட சென்னை அரசாங்கத்தின் 'தாராள புத்தி'யில் மறைந்திருக்கும தரக்குறைவும் அம்பலமாகிறது. சென்னை அரசாங்கத்தின் போக்கைக் கண்டு சீற்றமும் பிறக்கிறது.

திராவிடத்தின் விவசாயம் சிறுகச் சிறுக விஞ்ஞான பாதைக்குத் திருப்பிக் கொண்டிருக்கிறது. கூடிய விரைவில் முழு அளவில் விஞ்ஞானம் விவசாயத் துறையை ஆட்கொள்ளும் என்பது நிச்சயமாகும.

அப்பொழுது, செயற்கை உரத்திற்கு இப்பொழுது இருக்கிற தேவையைக் காட்டிலும், கூடுதலாக இடமுண்டு. அக்கூடுதலை, நெய்வேலி உரத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் உரத்தால் பூர்த்தி செய்ய முடியும்.

பயன்படுத்தப்படும் இடத்துக்கு அருகிலேயே உரம் உற்பத்திசெய்யப்படுவதால், வெகு தொலைவில் உள்ள சிந்திரி உரத்தின் விலையைக் காட்டிலும் மலிவாக இருக்கும்.

போக்குவரத்தில் ஏற்படக் கூடிய தாமதத்தின் காரணமாக, விவசாயிகளுக்குத் தேவைப்படும்பொழுது, சிந்திரி உரம் கிடைப்பதில் முட்டு ஏற்படுகிறது என்பது அனுபவம். இங்குள்ள விவசாயிகளுக்கு நெய்வேலி செயற்கை உரம காலா காலத்தில் கிடைப்பதில், மேற்கூறிய முட்டு ஏற்பட நியாயமில்லை.

நெய்வேலி பழுப்பு நிலக்கரியைக்கொண்டு, செயற்கை உர உற்பத்தியையும் மின்சார உற்பத்தியையும் இந்தியப் பேரரசு மேற்கொள்ளுவதாலுல், சிந்திரி உரத்துக்கு விதிக்கும் விலையைத்தான் நெய்வேலி உரத்துக்கும் விதிக்கும். இதனுல் திராவிட விவசாயத்திற்குக் காதொடிந்த ஊசி அளவும் இலாபம் இருக்காது.

இந்தியப் பேரரசு உற்பத்தி செய்யும் நெய்வேலி மின்சாரத்தை, ஒரு சாதாரணக் குடிமகனைப் போலவேதான், சென்னை அரசாங்கமும் விலை கொடுத்து வாங்க வேண்டும். கொடுக்கப்படும் விலையைக் காட்டிலும் கொஞ்சம் கூடுதலாக வைத்துத்தான், திராவிட மக்களுக்கு மின்சாரத்தை வினியோகிக்க சென்னை அரசாங்கம் முன்வரும். இதனுல், நெய்வேலி மின்சார உற்பத்தி மூலம் கிடைக்க வேண்டிய முழு வருமானத்தையும் சென்னை அரசாங்கம் பெற முடியாமல் போய்விடும். அது போன்றே, நெய்வேலி மின்சார பெருக்கத்தால் குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தை பெறும் பயனும் திராவிட மக்களுக்கு இல்லாமல் தொலைந்து போகும்.

இப்பொழுதும் காலம் தாழ்ந்துவிடவில்லை. சென்னை அரசாங்கம் விழித்துக்கொண்டு நெய்வேலி நிலக்கரித் திட்டத்தை, சொந்தப் பொறுப்பில் தொழில்படுத்த முனைய வேண்டும்.

இத்துறையில் இந்தியப் பேரரசு முதலீடு செய்ய ஒப்புக்கொண்டிருக்கும் ரூ. 60 கோடியை, சென்னை அரசாங்கம் கடனுகக் கேட்டுப் பெற வேண்டும். பேராசை கொண்டிருக்கிற இந்தியப் பேரரசு, தனது நியாயமான கோரிக்கைக்கு இணங்கி வரும் வகையில் சென்னை அரசாங்கம் பிடிவாதம் காட்டியாக வேண்டும்.

'மாநிலப் பித்துக் கூடாது' எனப் பிரதமர் பண்டிதர் முதற்கண் போதிக்கத்தான் போதிப்பார். அப்போதனையில் மனதை மயங்க விட்டுவிடாமல் கொண்ட கோரிக்கையில் வெற்றி பெறும் வகையில், நிலை தடுமாறுமல் சென்னை அரசாங்கம் நெஞ்சுத் துணிவுடன் இறுதி வரையில் விருப்பத்தை வலியுறுத்த வேண்டும். நிற்க,

பக்ரா நங்கல் திட்டத்தின் பக்ரா நீர்த் தேக்கத் திட்டம், எதிர்பார்க்கப்பட்ட காலத்திற்குள்ளாகவே, வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு விட்டது. இந்நீர்த் தேக்கத்தால்பலனடைகின்றன பஞ்சாப்—பெப்சு—இராஜஸ்தான் மாநிலங்கள்.

பக்ரா நீர்த் தேக்கத்திற்கு மட்டும் செலவழிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 120 - கோடி. இப்பெருந் தொகையை பஞ்சாப் மாநிலம், இந்தியப் பேரரசிடமிருந்து கடனுகப் பெற்றிருக்கிறது. அப்பெருந் தொகையில் ஏறத்தாழ ரூ. 40 கோடியை பல வகையில் பாழாக்கிவிட்டிருக்கிறது பஞ்சாப் அரசாங்கம். மோசடி குற்றச்சாட்டிற்கும் இடமில்லாமல் இல்லை. இந்த உண்மை பஞ்சாப் சட்டசபையில் அம்பலமாகி இருக்கிறது.

ஏற்கனவே, இவ்வுண்மையை, பஞ்சாப் அரசாங்கக் கணக்குத் தணிக்கைத் துறையும் சுட்டிக்காட்டி இருக்கிறது. மேலும் கணக்கை ஆராய்ந்து பார்க்க இந்தியப் பேரரசு விரும்பியது.

இந்தியப் பேரசின் மேற்குறிப்பிட்ட விருப்பத்திற்கு இணங்க, பஞ்சாப் அரசாங்கம் ஒப்ப மறுத்துவிட்டது. கடன் கொடுத்திருக்கிற இந்தியப் பேரரசிற்கு, கடனைத் திருப்பிக் கேட்கத்தான் உரிமை இருக்கிறதே அல்லாது, கடன் வாங்கினவர்களின் கணக்கை ஆராய்வதற்கான சிறு உரிமையும் அறவே கிடையாது; இந்தியப் பேரரசின் கோரிக்கை அரசியல் சட்ட விதிகளுக்கு முரணுனதாகும் என்று காரணங்காட்டி இந்தியப் பேரரசின் கோரிக்கைக்கிணங்க ஒரேயடியாக மறுத்துவிட்டது பஞ்சாப் அரசாங்கம்.

அரசியல் சட்டத்தின் கீழ், பஞ்சாப் அரசாங்கத்திற்கு என்னென்ன உரிமைகள் வழங்கப்பட்டுள்ளனவோ அதே உரிமைகள்தான் சென்னை அரசாங்கத்துக்கும் வழங்கப்பட்டுள்ளன. வாங்கின கடனில் மூன்றில் ஒரு பங்கை விருப்பப்படி வளஎி விட்டு விட்டு, அதற்கு விளக்கங் கேட்கும் கடன் கொடுத்த இந்தியப் பேரரசை 'கடன் கொடுத்தாயா — வாங்கிக் கொள்! கணக்கைப் பார்க்க நீ யார்? அரசியல் சட்டத்தில் அதற்கு இடமில்லை பார்!' எனக் கம்பீரமாகக் கேட்கிறது பஞ்சாப் அரசாங்கம்!

ஆனுல் நமது சென்னை அரசாங்கமோ, தவறு செய்யாத நிலையிலும் கூட, குற்றமுள்ள நெஞ்சுக்கு இடமில்லாதபோதிலுங்கூட, இந்தியப் பேரரசை, நெய்வேலி திட்டத்தைச் சொந்தப் பொறுப்பில் நடத்தக் கடன் கேட்கவும் அஞ்சுகிறது!

நெய்வேலி நிலக்கரி திட்டத்தைத் தொழில்படுத்த, தேவைப்படும் மூலதனத்தை இதுவரை இந்தியப் பேரரசிடம் கடனுகக் கேட்டதோ இல்லையோ, இனியாவது சென்னை அரசாங்கம் கேட்க முன்வர வேண்டும்.

பக்ரா நீர்த்தேக்கத் திட்டத்திற்காக பஞ்சாபிற்குக் கொடுத்துள்ள ரூ. 120 கோடியை சுட்டிக் காட்டியே, நெய்வேலி பழுப்பு நிலக்கரி திட்டத்தைச் சொந்தப் பொறுப்பில் செயலாற்ற, மதிப்பிடப்பட்டுள்ள ரூ. 60 கோடியைக் கடனுகக் கொடு என, இந்தியப் பேரரசிடம் சென்னை அரசாங்கம் கேட்டாக வேண்டும்.

சென்னை அரசாங்கம் கேட்குமா? அதற்குத் தேவைப்படும் நெஞ்சுரம் சென்னை அரசாங்கத்திற்கு உண்டா? கனம் காமராசரின் 'செயல் திறம்' இக்கோரிக்கையின் மூலம் தான் திராவிட மக்களுக்குத் தெரிந்தாக வேண்டும். கனம் என்ன செய்யப்போகிருரோ, பொறுத்திருந்து பார்ப்போம்.

ஓராண்டில் 254 நாட்கள் சுற்றுப் பிரயாணம்!

மந்திரிகள் போக்கு: மாதத்தில் 15 நாட்கள் கூட தலைநகரில் இருக்கவில்லை

பஞ்சாப் மாநில அமைச்சர்கள், இப்போது தாங்கள் முன்பு செய்திருந்த சுற்றுப்பிரயாணங்களைக் காட்டிலும் அதிகமான சுற்றுப்பிரயாணங்களைச் செய்திருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

கடந்த 1954 செப்டம்பர் மாதத்தில் எந்த ஒரு மந்திரியும் 15 நாட்களுக்கு மேல் தலைநகரில் இருக்கவில்லை என்பதையும், கேள்விக்குப் பதிலளிக்கையில் இத்தகவலை சட்டசபையில் வெளியிட்ட சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறது.

அந்த மாதத்தில் கல்வி மந்திரி 28 நாட்கள் (மிக அதிகம்); முதன் மந்திரி 23 நாட்கள்; நீர்ப்பாசன மந்திரி 22 நாட்கள்; நிதி மந்திரி 25 நாட்கள்; தொழில் மந்திரி 22 நாட்கள்; இன்னும் இரண்டு மந்திரிகள் 16 நாட்கள்—தலைநகரில் இல்லாமல் சுற்றுப் பிரயாணத்திலிருந்ததாகக் கூறப்பட்டது.

சென்ற ஆண்டில் ஒரு மந்திரி 254 நாட்கள் மொத்தம் சுற்றுப் பிரயாணம் செய்திருந்தாராம்!

பம்பாயில் பெண் போலீஸ் அதிகாரிகள்!

ஒவ்வொரு முக்கியமான போலீஸ் நிலையத்திலும் இடம் பெறுவராம்

"பம்பாய் மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு முக்கியமான போலீஸ் நிலையத்திலும், பெண்களுக்கு உதவும் பொருட்டு ஒரு பெண் போலீஸ் அதிகாரி நியமிக்கப்படுவார்,"

என்ற தகவலை, என். எம். காம்தே என்ற பம்பாய் போலீஸ் இன்ஸ்பெக்டர் - ஜெனரல் வெளியிட்டுள்ளார்.

பெண்கள் தங்கள் குறைகளைக் கூற பெண்களிடம் செல்வதில் கஷ்டமொன்றும் இருக்காது என்றும், உண்மையில் மக்கள் தங்கள் குறைகளைக் கூற, போலீசாரிடம் எவ்வித பயமுமின்றி வரவேண்டும் என்று போலீசார் எதிர்பார்க்கின்றனர் என்றும் அவர் பத்திரிகையாளரிடம் குறிப்பிட்டிருக்கிருர்.

டாடா கம்பெனி மேலும் விரிவடைகிறது

சர்க்கார் உதவியா?

"விரிவுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள டாடா இரும்பு, எஃகுத் தொழிற்சாலை 1958-59ல் சுமார் 9,81,000 டன் இரும்பு உற்பத்தி செய்யும்," என்று வர்த்தக மந்திரி கார்மார்க்கர் மக்கள் சபை தெரிவித்துள்ளார்.

1951–ம் ஆண்டில், இங்கு 7,50,000 டன் மட்டுமே உற்பத்தி ஆயிற்று.

"டாடா கம்பெனிக்கு ஏதேனும் உதவியளிப்பதாக சர்க்கார் வாக்குறுதி தந்துள்ளதா?" என்று கேட்டபோது, "டாடா கம்பெனியை விரிவுபடுத்துவதற்கான திட்டம் இப்போதுதான் விளக்கமாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது; இதற்கிடையில், சர்க்கார், உண்மையிலேயே, நாட்டில் இரும்பு உற்பத்தி அதிகமாக வேண்டுமென்பதில் அக்கரை காட்டி வருகிறது," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

தீவிர கவனம் செலுத்தப்படுகிறதாம்!

"நிலமில்லாத ஏழை மக்களுக்கு தரிசு நிலங்களை ஒதுக்குவதில் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது; சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் தாலுக்காவில் ஏழைகளுக்கு நிலம் துரிதமாகவே ஒதுக்கப்படுகிறது; ஏற்கனவே 15,000 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுவிட்டது; மேலும் 20,000 ஏக்கர் ஒரு மாதத்திற்குள் ஒதுக்கப்பட்டுவிடும்,"

என்று, ரெவினியூமந்திரி மாணிக்கவேலர், சட்டசபையில் ரெவினியூ மானியக் கோரிக்கையின் விவாதங்களுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டு, மேலும் சொன்னுர்:—

"மாவட்ட கலெக்டரே நிலத்தை ஒதுக்குவதற்கு பதிலாக, தாசில்தாரும் நிலத்தை ஒதுக்கலாம் என்று ஒரு புதிய திட்டத்தை சர்க்கார் கொண்டுவரவிருக்கிறது; இதற்கென தக்கதோர் திட்டத்தைச் சமர்ப்பிக்கும்படி ரெவினியூ போர்டு கேட்கப்பட்டுள்ளது; இத்திட்டம் அமுலான பிறகு, 'நிலம் ஒதுக்குவதில் காலம் கடத்தப்படுகிறது,' எனக் கூறுவதற்கு இடமிருக்காது," என்ருர்.

"மிக விரைவில் நிலச் சீர்திருத்தம் வந்துவிடும்; இன்றுள்ள நிலைமையில், 'மிக விரைவில்' என்பதற்குத் தனி அர்த்தமிருக்கிறது என்பதை உணர வேண்டும்," என்ருர்.

இந்திய விவசாயிகளுக்கு அனுபவப் பயிற்சி

ஆஸ்திரேலியாவில், புஞ்சைப் பயிர் சாகுபடி, கால்நடை வளர்ப்பு, செம்மறி ஆடு வளர்ப்பு, பால் பண்ணை நிர்வாகம், பாசன வேலை, பழத்தோட்டச் சாகுபடி போன்ற பல்வேறு விவசாயத் துறைகளில், ஆறுமாத அனுபவகாலப் பயிற்சி பெற்று வருவதற்காக ஆஸ்திரேலியாவுக்கு இந்திய சர்க்கார் அனுப்ப உத்தேசித்துள்ள இந்திய விவசாயிகள் பிரச்சினையில், விண்ணப்பங்களை அனுப்புவதற்கான காலத்தை நீடிப்பதென இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர். மாநில சர்க்கார்களுக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி, மார்ச 31-ந் தேதிவரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

பம்பாயில் ஒரு 'சிந்திரி'

மத்திய அரசாங்கம் நியமித்த உர உற்பத்திக் குழு உறுப்பினர்கள், சூரத், ஹெல்வாக ஆகிய இடங்களுக்கு வருகை தந்து, அந்தப் பிரதேசத்தில் ஒரு உர உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவ முடியுமா என்பதை ஆராய்ந்தனர்; பம்பாய் மாநில அபிவிருத்தி இலாகா அதிகாரிகளும் அவர்களுடன் அங்கு சென்றிருந்தனராம்.

சூரத்தில் ஒரு உர தொழிற்சாலை நிறுவுவதற்குக் கிடைக்கக் கூடிய வசதிகள் குறித்து விளக்கம் கொண்ட மனு ஒன்றுடன், அங்கு தொழிற்சாலை நிறுவக் கோரி தூதுக் குழு ஒன்று அந்த ஆராய்ச்சிக் குழுவினரைச் சந்தித்திருக்கிறது.

கிராமங்களில், உயர்தரக் கல்விக்கான வசதிகளை ஏற்படுத்துவதற்காக, மத்திய கல்வி மந்திரி காரியாலயம் நியமித்திருந்த நிபுணர்கள் கமிட்டி, கிராமக் கல்வி நிறுவனங்களை அமைக்கும்படி சிபாரிசு செய்துள்ளது.

நம்பத்தகாதவர்களா கண்கண்ட சாட்சிகள்?

போலீசாரின் போக்கிற்கு பம்பாய் நீதிபதி கண்டனம்

மிக நம்பத்தகாதவர்களை சாட்சிகளாக நடிக்கச் செய்கிற போலீசாரின் போக்கை பம்பாய் எஸ்பிளனேட் நீதிமன்ற மாகாண நீதிபதி கண்டித்தார்.

"சமீப காலத்தில் கொண்டுவரப்பட்ட மதுவிலக்கு, சூதாட்டம் போன்ற வழக்குகளில், போலீசார், 'இவர்கள் சம்பவத்தைக் கண்ணால் கண்டவர்கள்,' என்று கொண்டுவந்து நிறுத்துகிற சாட்சிகள், 'குற்றவாளிக்கா, அல்லது சர்க்காருக்கா சாட்சியம் சொல்கிறார்கள்,' என்பதே ஒரு பெரும் சூதாட்டமாகி விட்டது" என்று நீதிபதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்த நீதிமன்றத்தில் மூன்று பேர்கள் சூதாடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தனர். கடந்த டிசம்பர் 23-ந் தேதியன்று அவர்களில் ஒருவரான முகமது ஈசாக் என்ற சைக்கிள் கடைக்காரர், சூதாடும் குகை ஒன்றில் மற்றும் இருவருடன் கைது செய்யப்பட்டாராம்.

இவர்கள் சூதாடினார்கள் என்பதைக் கண்ணால் கண்டதாக, போலீசாரின் சாட்சியாக முகம்மது இப்ராகிம் என்பவரைக் கொண்டு வந்து நிறுத்தினர்.

அவரை நீதிபதி, 'நீ யார்?' எனக் கேட்டபோது, 'நான் வீதிவழியே பொருள்களை விலைகூறி விற்கும் ஒரு அங்காடி கடைக்காரர்,' என்றாராம்.

நீதிபதி கூறினார் :

"வீதி வழியே பொருள் கூறி விற்பதற்கு, அவர் சர்க்காரின் அனுமதி பெறாதவர்; அவரே ஒரு குற்றம் புரிந்தவராக இருக்கிறார் ; அப்படிப்பட்ட குற்றவாளி ஒருவரை, வேறொரு குற்றத்தை ருசுப்படுத்த சர்க்கார் தரப்பில் சாட்சியாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறார் ;

"இவரை சாட்சியாக்கிக் கொண்ட போலீஸ் அதிகாரி இவரது தொழில் பற்றி விசாரித்து அறியாமற்போனது வருந்தத்தக்கதே !

"கண்ணாரக் கண்ட சாட்சிகள், ஒரு வழக்கில், மிகப் பிரதானமான இடத்தைப் பெறுகிறார்கள் : அதுவும் போலீசார் முற்றுகையிட்டு சோதனை நடத்தும் ஒரு சம்பவத்தின்போது, அந்தச் சாட்சிதான், தவறாகக் கைது செய்யப்படுவதிலிருந்து பாதுகாப்புத் தருபவர்," என்று குறிப்பிட்டு, குற்றஞ்சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

"சட்டம் கூடாதென்கிற ஒரு தொழிலைச் செய்கிறவர் இங்கு சாட்சியாக நிறுத்தப்பட்டிருக்கிறார். அப்படி இருக்கும்போது, சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் ஒருவரையா போலீசார் கண்கண்ட சாட்சியாகத் தேர்ந்தெடுப்பது?" என்றும் அவர் கேட்டார்.

இந்தியப் பேரரசின் புது வரிப் பிரரேபணைகள்

மாற்றப்படக்கூடுமாம்!

புதுடில்லி, மார்ச் 7—

இந்தியப் பேரரசு தனது 1955-56-ம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் அறிவித்துள்ள புது வரிப் பிரரேபணைகள்—குறிப்பாக ஜவுளி வரிப் பிரரேபணைகள் மாற்றப்படலாம் என்று தெரிய வருகிறது.

மக்கள் சபையில் வரவு-செலவுத் திட்ட விவாதத்திற்கு நிதிமந்திரி தேஷ்முக் பதிலளிக்கையில் இந்த மாறுதல்களை அறிவிக்கக்கூடும் என்றும் தெரிய வருகிறது.

ஜவுளி மீது உபரி உள்நாட்டுச் சுங்கவரி விதிப்பது — அதிலும் குறிப்பாக நடுத்தர மோட்டா துணிகள் மீது வரி விதிப்பது கண்டிக்கப்படுவதாயும், அந்த வரி விதிப்பு ஏழை மக்களைப் பாதிப்பதாகக் கருதப்படுவதாயும் தெரிகிறது.

டில்லி குமாஸ்தாக்கள் அணிவகுப்பு

சம்பள உயர்வு கோரி 'எதிர்ப்பு வாரம்'

புதுடில்லி, மார்ச் 7—

5000-த்திற்கும் அதிகமான (மூன்றாம் பிரிவைச் சேர்ந்த) சர்க்கார் அலுவலக குமாஸ்தாக்கள், தாங்கள் கொண்டாடிய 'எதிர்ப்பு வாரத்'தின் இறுதி நாளன்று, தங்கள் சம்பள விகிதங்களை உயர்த்தக் கோரி, ஒலி முழக்கம் எழுப்பிக்கொண்டு, தங்கள் கோரிக்கைகளைக் குறிக்கும் அட்டைகளைத் தூக்கிக்கொண்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலம் வந்தனர்.

பின்னர் அவர்கள் காந்தி மைதானத்தில் ஒன்றுகூடி கூட்டமொன்று நடத்தினர்.

திருமதி சுசேதா கிருபளானி, ஹிரேன்முகர்ஜி ஆகியோர் அக்கூட்டத்தில் கலந்துகொண்டு, மக்கள் சபையிலும் வெளியிலும் இருந்து தங்களாலான ஆதரவினைத் திரட்டித் தருவதாகக் கூறியுள்ளனர்.

மத்திய அரசாங்க ஊழியருக்குத் தருவது போலவே தங்களுக்கும் சம்பள உயர்வு தரப்பட வேண்டுமென தீர்மானம் ஒன்றும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிகிறது.

இந்தியாவிலுள்ள காவல் கைதிகள்

இந்தியப் பேரரசின் 1950-ம் ஆண்டின் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ், 1954-ம் ஆண்டு டிசம்பர் 31-ந் தேதியன்று 124 பேர் காவல் கைதிகளாக உள்ளனர் என்று இந்திய சர்க்கார் கெஜட் அறிக்கை ஒன்று கூறுகிறது. அவர்களில் ஒருவர் வெளிநாட்டுக்காரராம்.

பீகார்—10 ; பம்பாய் 51 ; உ. பி. – 6 ; மேற்கு வங்கம் - 30 ; ஐதராபாத்-3 ; மத்திய பாரத் - 15 ; ராஜஸ்தான் - 7 ; டெல்லி-1; கட்ச்-1 ;—இவ்வாறு, 124 பேரும் பல மாநிலங்களைவும் சேர்ந்தவர்கள்.

அதிகாரமற்ற பதவி

"இந்தியத் துணைக் கண்டத்தின் உதவி ஜனாதிபதி பதவி ஒரு மதிப்பான வேலையே தவிர, அதிகாரங்கள் கொண்டதல்ல," என்று, டாக்டர் இராதாகிருஷ்ணன், பாட்டியாலா பள்ளிக்கூட ஆண்டு விழா ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பரிசுகளை வழங்கிய அவரிடம், பள்ளிக்கு அதிகமான நிதி தேவை எனக் கோரப்பட்ட பொழுது, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுவிட்டு, சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அந்த கோரிக்கையை அனுப்பிவைக்குமாறு கூறியிருக்கிறார்.

நெல் விலை ஏறுமுகம்

கோபிசெட்டிபாளையம், மார்ச் 7—

கோபியிலும் சுற்றுப்புறங்களிலும் நெல் விலை ஏறியுள்ளது.

இங்கு உதிரி சம்பா நெல் மூட்டை ரூ. 14—4—0 வரையில் விற்கப்படுகிறது ; மேலும் விலை ஏறலாம் என்று எண்ணி சில மிராசுதார்கள் நெல்லை விற்கத் தயங்குகிறார்கள் ; ஏற்கனவே நெல்லை விற்றுவிட்ட ஏழை விவசாயிகளும், நெல் வாங்கும் ஏழை மக்களும் மிகுந்த கவலைக்குள்ளாகியிருக்கின்றனர். (ந-நி)

ஏகபோக உரிமை கொண்டாடுவதா ?

பயமுறுத்திப் பணியவைக்க முயல்வது கேவலமாகும்!

"ஒரு சில வல்லரசுகளின் ஏகபோக உரிமையாக அணு சக்தி இருக்க இயலாது; சிறிய நாடான யூகோஸ்லேவியாவிலும் அணு சக்தி மூலப் பொருட்கள் உள்ளன ; இந்நாட்டின் தொழில் தேவைகளுக்குப் போதிய அணு சக்தியை இம்மூலப் பொருட்களிலிருந்து தயாரிக்க முடியும்," என்று, மார்ஷல் டிட்டோ, யூகோ சட்டசபையில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் சொன்னார் :—

"அணு அல்லது நீர்வளிக்குண்டு, போர் மூளுமானால், மனிதவர்க்கமே அழியக்கூடும்; அதை ஆக்க வேலைக்குப் பயன்படுத்தினால்தான் உலக மக்கள் முன்னேற முடியும் ; அவைகளை நாச வேலைக்குப் பயன் படுத்துவது, மற்றவர்களைப் பணியவைக்க முயலும் கேவலமான நடவடிக்கையாகும் ; விஞ்ஞானத் துறையின் அரிய பொக்கிஷமான இவைகளை எந்த நாடும் பாழ்படுத்தாதவாறு கண்காணிக்க ஒரு சர்வதேச ஏற்பாட்டை வகுக்கவேண்டும்."

புதிய அணுகுண்டு பரிசோதனை

250 மைலுக்கு அப்பால் வெளிச்சம் தெரிந்ததாம்!

அமெரிக்காவிலுள்ள நெவாடா பாலைவனத்தில் 7-ந் தேதி விடியற்காலையில் அணுகுண்டு பரிசோதனை நடைபெற்ற விபரம் வெளியாகியுள்ளது. அணு குண்டு பரிசோதனைகளிலேயே இதுதான் மிகப் பெரியதாம்.

இந்த குண்டு வெடித்ததும் மிகப் பிரகாசமான ஒளி எழுந்ததாம் ; கண்ணைப் பறிக்கும் அந்த வெண்ணொளி 75 மைல் தூரத்திற்குத் தெரிந்ததாம் ; 250 மைல் தூரத்திலுள்ள லாஸ்ஏஞ்சல்ஸ் நகரில் பொன் நிற ஒளியாகத் தோன்றியதாம் !

500 அடி உயரத்திலுள்ள கோபுரமொன்றிலிருந்து அந்தக் குண்டு வீசப்பட்டிருக்கிறது ; முதலில் தோன்றிய வெளிச்சத்தைத் தொடர்ந்து புறப்பட்ட பிரம்மாண்டமானதோர் அனல் உருண்டை 25 விநாடி நேரம் வானில் தேங்கியிருந்ததாம்.

என்ன நோக்கமோ ?

லண்டன், மார்ச் 7—

ஈராக்—துருக்கி கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் பிரிட்டன் இரு மாதங்களுக்குள் சேரக்கூடும் என்று இங்கு ராஜதந்திர வட்டாரத்தினர் கருதுகின்றனர்.

ஈராக்கிலிருந்து திரும்பியுள்ள பிரிட்டிஷ் வெளிநாட்டிலாகா மந்திரி அந்தோனி ஈடன் அடுத்த வாரம் துருக்கிக்கு வருகை தரும் போது இதுகுறித்து விவாதிப்பார் என்றும் கூறப்படுகிறது.

அசாம் வரவு-செலவுத் திட்டம்

$2\frac{1}{2}$ கோடி ரூபாய்த் துண்டு விழுந்தும் புது வரியில்லை !

அசாம் மாநிலத்தின் 1955-56-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 2.5 கோடி துண்டு விழுந்தும்கூட அங்கு புதுவரி எதும் விதிக்கப்படவில்லை என்று தெரிய வருகிறது.

வருமானம் ரூ. 19,05,22,000 என்றும், செலவு ரூ. 21,47,28,000 என்றும், எனவே, துண்டு விழும் தொகை ரூ. 2,42,06,000 என்றும் தெரிய வருகிறது.

1954-ம் ஆண்டில், இந்தியாவில் உற்பத்தியான மின்சார 'பல்பு'களின் எண்ணிக்கை மொத்தம் 2,22,90,000 ஆகும் ; முந்திய ஆண்டில் 1,96,70,000 'பல்பு'கள்தான் உற்பத்தி செய்யப்பட்டன.

இந்தியக் கிராம, நகர்ப்புறங்கள்

விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்போர் பற்றிய புள்ளிவிவரங்கள்

இந்தியாவில், கிராமப் பகுதிகளில் வாழும் விவசாயிகளல்லாதவர்களின் எண்ணிக்கை, நகரப் பகுதிகளில் வாழும் விவசாயிகளின் எண்ணிக்கையைவிட அதிகமாக இருக்கிறது.

கிராமப் பகுதிகளில் வசிக்கும் விவசாயிகளல்லாதவர்கள் 18.5 சதவிகிதம் ; நகரப் பகுதிகளில் வாழும் விவசாயிகள் 14.0 சதவிகிதம். மொத்தம் கிராமாந்திர மக்கள் தொகை 2,948 லட்சம் ; இதில் 2,404 லட்சம் பேர், அதாவது 81·5 சதவிகிதத்தினர் விவசாய வகுப்பினர். நகர மக்களின் மொத்தத் தொகை 618 லட்சம் ; இதில் 531 லட்சம் பேர் — அதாவது 86·0 சதவிகிதத்தினர் விவசாயிகளல்லாதவர்கள்.

கிராமாந்திர விவசாயத் துறையினரில், 687 லட்சம் பேர் தாமாக ஊதியம் பெற்று வாழ்பவர்கள் ; 1,414 லட்சம் பேர் சம்பாத்தியமில்லாமல் சம்பாதிப்போரைச் சார்ந்து பிழைப்பவர்கள்; 303 லட்சம் பேர் ஓரளவு சம்பாதிப்பவர்கள்.

விவசாயிகளல்லாத கிராமாந்திர மக்கள் தொகை 544 லட்சம் ; இதில் 170 லட்சம் பேர் தாமாக உழைத்து ஊதியம் பெற்று வாழ்பவர்கள்; 326 லட்சம் பேர் சம்பாத்தியமில்லாது பிறரைச் சார்ந்து வாழ்பவர்கள்; 48 லட்சம் பேர் ஓரளவு சம்பாதிப்பவர்கள்.

நகரப் பகுதிகளிலுள்ள விவசாய வகுப்பினர்களில் 23 லட்சம் பேர் சுய சம்பாத்தியத்தோடு வாழ்வோர் ; 56 லட்சம் பேர் சம்பாத்தியம் எதுவுமில்லாமல், சம்பாதிப்பவர்களுடன் இருந்து வாழ்பவர்கள்; 8 லட்சம் பேர் ஓரளவு சம்பாதிக்கின்றவர்கள்.

நகரப் பகுதிகளில் விவசாயிகளல்லாதவர்களின் மொத்தத் தொகை 531 லட்சம்; இதில் 168 லட்சம் பேர் சுய சம்பாத்தியக்காரர்கள்; 347 லட்சம் பேர் சம்பாத்தியமில்லாதவர்கள் ; 21 லட்சம் பேர் ஓரளவுக்குச் சம்பாதிப்பவர்கள்.

இந்தியாவில் கிராமப் பகுதிகளில் பல தொழில்களிலும், சேவைகளிலும் ஈடுபட்டு தாமாக உழைத்து ஊதியம் பெற்று வாழ்பவர்கள் மொத்தம் 165 லட்சம் பேர் ; இவர்களில் 137 லட்சம் பேர் ஆண்கள் ; 24 லட்சம் பேர் பெண்கள்.

நகரப் பகுதிகளில் பல தொழில்களிலும், சேவைகளிலும் ஈடுபட்டுள்ள மொத்த சுயசம்பாத்தியக்காரர்கள் எண்ணிக்கை 159 லட்சம் ; இதில் 143 லட்சம் பேர் ஆண்கள்—16 லட்சம் பேர் பெண்கள். இவர்களில், வேலை கொடுக்கும் தொழிலதிபர்கள் 7 லட்சம் பேர் ; வேலை செய்யும் தொழிலாளர்கள் 83 லட்சம் பேர் ; 64 லட்சம் பேர் சுயேச்சையான தொழிலாளர்கள்.

இதிலிருந்து கிராமாந்திர மக்கள் தொகையில், விவசாயமற்ற இதர தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் தொகை அதிகமாக இருப்பதும், நகரத் தொகையில் வேலை கொடுப்போர் உயர்வாக இருப்பதும் தெரிய வரும்.

ஆண்டுதோறும் ரூ. 3 லட்சம் !

'ஸ்டேடியம்' அமைக்க மத்தியப் பிரதேச அரசாங்கத் திட்டம்

ஜபல்பூர், மார்ச் 7—

மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள எல்லா முக்கிய நகரங்களிலும் நவீன 'ஸ்டேடியங்கள்' அமைப்பது, ம. பி. - யின் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறும் என்று தெரிகிறது.

ஜபல்பூரில் அமையவிருக்கிற பலவற்றுள் ரணிதால் எனுமிடத்தில் 99 ஏகர் நிலம் 'ஸ்டேடிய'த்திற்காக ஒதுக்கப்பட்டிருப்பதும் ஒன்றாகும்.

ஆண்டுதோறும் ரூ. 3 லட்சம் வீதம், 10 ஆண்டுகளுக்கு இம்மாதிரி ஸ்டேடியங்களை அமைப்பதற்காக சர்க்கார் செலவிடப்போவதாகத் தெரிகிறது.

தாராளமாக ஏற்கட்டும்!

"புதிய நிலக்கரிச் சுரங்கங்களைப் பரிசீலனை செய்வது, சுரங்கவேலைகளை நடத்துவது ஆகியவைகளைச் சிறிது சிறிதாக சர்க்காரின் நேரடியான பொறுப்பில் கொண்டுவருவது பற்றி ஒரு திட்டம் ஆலோசிக்கப்பட்டு வருகிறது," என்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

செய்திச் சுருள்

★

வட சென்னை தாளமுத்து — நடராசன் முன்னேற்ற மன்றம்

6-3-55 காலை 9 மணியளவில் இ. அன்பானந்தன் தலைமையில் நடைபெற்ற சொற் பயிற்சிக் கூட்டத்தில், தோழர் இரா. புவியரசு 'எண்ணம்' என்ற தலைப்பிலும், தோழர் முகை அன்பு 'திருக்குறள்' பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

இளைஞர் நற்பணி மன்றம்

6—3—55 மாலை 6½ மணிக்கு இராயபுரம், கௌஸ் மொய்தீன் பேட்டையிலுள்ள மேற்படி மன்றச் சார்பில், தோழர் சுரதா தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் தமது உரையில் பண்டைய திராவிட மக்களின் பெருமை குறித்துப் பேசினார். தோழர்கள் ஜே. செல்வராசன், இ. முத்தரசன், வி. முத்து, ப. கன்னையன் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகம்

25—2—55 மாலை சுமார் 7-30 மணியளவில் சென்னை சூளையில் உள்ள மேற்படி படிப்பக மனையில் தோழர் மாசிலாமணி தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், தோழர் கண்ணதாசனின் தந்தையார், விருதுநகர் எம். எஸ். பெரியசாமி ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது. பின்னர் பொங்கல் விழாப் பொதுக்கூட்ட வரவு–செலவு கணக்குகள் பரிசீலனை செய்து ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், மார்ச் மாதம் 26ந் தேதி ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள் பொதுக் கூட்டமும், படிப்பக ஆண்டு விழாவும் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

திருமணங்கள்

எருமப்பட்டி தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற தோழர் வீராசாமி—தோழியர் பாப்பா திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

ஃ ஃ ஃ

கொசப்பாளையம் (வ. ஆ. மாவட்டம்) தோழர் இராதாகிருஷ்ணன்-தோழியர் சகுந்தலா கலப்புத் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

(இத்திருமணங்கள் நடைபெற்ற நாட்கள் விபரம் குறிப்பிடப்படவில்லை)

“வரவு-செலவு திட்டத்தில் ‘சோஷலிச’ வாடை கூட வீசவில்லை”

“எதிர்க் கட்சியை மதிக்க காங்கிரஸ் முன்வருமா?”

“திட்டங்களினால் மக்கள் கண்ட பலன் என்ன?”

சென்னை சட்ட சபையில் ஏ. கோவிந்தசாமி முழக்கம்

“ஆளும் கட்சியினரைப் பாராட்டிப் பேசுகின்றபோது, அவர்கள் முகத்தில் மகிழ்வும், சிரிப்பும் ஏற்படுகிறது; ஆனால், எதிர்தரப்பிலிருந்து குற்றங்குறைகளை நல்ல முறையில் எடுத்துச் சொல்லுகின்றபோது, அவர்கள் முகம் சுருங்கிவிடுகிறது; நியாயமான குறைபாடுகளை எடுத்துக் காட்டுவதற்குத்தான் எதிர்க் கட்சியினர் உள்ளனர்; அவர்களை, ஆட்சியிலிருப்போர் ‘எதிர்க் கட்சி’யாகக் கருதுகின்றனர்—இது, மிகவும் தவருனதாகும்.”

“ஆங்கில நாட்டின் அரசியல் சட்டத்தைக் கடைப்பிடித்து இந்திய அரசியல் சட்டம் தீட்டப்பட்டுள்ளது. அந்த முறையிலே பார்த்தால், மேல் நாட்டில்—பார்லிமெண்டில், எதிர்க் கட்சித் தலைவருக்கு தனிச் சம்பளம் அளித்து, மிக்க மரியாதை காட்டுகின்றனர்; அந்த முறையில், எதிர்க் கட்சியினருக்கு மதிப்புக் கொடுப்பது ஒரு சர்க்காருடைய கடமையாகும்; ஆனால், இன்றுள்ள இந்நாட்டு ஆட்சியினர் அவ்வாறு செய்கின்றனரா?—இல்லையே!”

“காந்தியத் தத்துவப்படி—ஒரு குறிப்பிட்ட கொள்கையின் அடிப்படையில், காங்கிரஸ் கட்சியின் பெயரால் ஆட்சி அமைக்கப்படாமல், காமன்வீல், உழைப்பாளி கட்சி ஆகியவைகளைச் சேர்த்து, ஐக்கிய முன்னணி அரசாங்கம் நடத்துகின்ற பரிதாபகரமான நிலைதான் இன்று காங்கிரசுக்கு ஏற்பட்டிருக்கிறது; ‘ஓட்’ எண்ணிக்கையைப் பலப்படுத்துவதற்காக எதிர்க்கட்சியிலுள்ள உறுப்பினர்களையெல்லாம், கொள்கை ரீதியைக் கைவிட்டுச் சேர்த்துக்கொண்டுள்ள காரணத்தால்தான், மக்கள் நன்மைக்கான திட்டங்கள் தட்டிக்கழிக்கப்பட்டு வருகின்றன; இதனால், மக்களுடைய முக்கியப் பிரச்சினைகள் தீருவதற்கு மார்க்கமில்லாமல் போய்விட்டது.”

“நாட்டில் இன்றைய தினம், ‘சோஷலிச அடிப்படை’ உருவாகிக்கொண்டும், உருவாக்கப்பட்டும் வருகிறது என்று பண்டித நேரு கூறிச்சென்றார்; ஆனால், இம்மாநில ஆட்சியினர் தயாரித்துள்ள வரவு—செலவுத் திட்டத்தில், ‘சோஷலிச’ வாடை வீசவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் துணிந்து கூறலாம். இம்மாநில மக்கள் எவ்வளவு எடுத்துக் கூறியும், ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், வட நாட்டை வளம் பெற்றதாகச் செய்துகொள்ளுகிறார்களே தவிர, தென்னாட்டைப் புறக்கணித்து வருகிறார்கள். இதை நாங்கள் மட்டும் சொல்லவில்லை—காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருமதி அம்புஜம் அம்மையார் அவர்களும் ஆவடி மாநாட்டில் எடுத்துக்காட்டியுள்ளார்; அவ்வாறே நிதி அமைச்சரும் கூறியுள்ளார்—‘ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், தென்னாட்டைக் கவனிக்காவிட்டால், இங்கு பெரிய ஒரு எதிர்ப்புச் சக்தி உருவாகக்கூடும்; ஆகவே இதைக் கவனிக்க வேண்டும்,’—என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.”

“காங்கிரஸ் ஒரு அகில இந்திய நிறுவனமாக விளங்குகிறது என்று கூறுகிறார்கள்; ஆனால் அவ்வளவு பெரிய நிறுவனமாக அது இருந்தும்கூட, தென்னாட்டைப் பற்றி வட நாட்டவரை ஏதாவது கேட்க வேண்டுமானால், இம்மாநில ஆட்சியினர் அஞ்சுகின்றனர்—தென்னாட்டைத் தொழில் வளப்படுத்த இதுவரை ஒன்றும் செய்யவில்லை—நெய்வேலி வேலையைத் துரிதப்படுத்தவில்லை—என்பதே இதற்குக் காரணமாகும்,”

—இவ்வாறு, தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ அவர்கள், சென்னை சட்டசபையில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்மீது பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் சொன்னார்:—

“வரவு-செலவுத் திட்டத்தை தமிழ் மொழியில் வழங்கியதற்காக நிதியமைச்சரைப் பாராட்டுகிறேன். இவ்வளவு துணிகரமான வழியை அவர் பின்பற்றியதற்கு ஆவடி மாநாடுதான் காரணமாகும்.

‘ஆவடி மாநாட்டில் நிதி அமைச்சர் தமிழிலே பேசியபோது, அங்கு வந்திருந்த வடநாட்டினர், ‘ஆங்கிலத்தில் பேசுங்கள்’ என்று கூப்பாடு போட்ட சமயத்தில், நிதி அமைச்சர், ‘இம்மாநாடு தமிழ்நாட்டில் நடைபெறுகிறது—இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் கலந்துகொண்டிருக்கிறார்கள்; ஆகவே, தமிழிலேயே பேசுகிறேன்’ என்று கூறிவிட்டு, வடநாட்டவரை திருப்திப்படுத்துவதற்காக, ‘ஆங்கிலத்திலும் பேசுகிறேன்,’ என்று கெஞ்சுப்படியான பரிதாபநிலை அவருக்கு ஏற்பட்டது. ஆனால், இந்தச் சட்டசபையைப் பொறுத்த மட்டில், மலையாளம், கன்னட உறுப்பினர்கள் இங்கு இருந்தாலும்கூட, ‘அவர்களெல்லாம் சகோதர நாட்டை—திராவிட நாட்டைச் சேர்ந்தவர்கள்; அவர்களொன்றும் கிளர்ச்சி செய்யமாட்டார்கள்,’ என்ற தைரியத்தோடு, வரவு—செலவுத் திட்டத்தை தமிழிலே அச்சடித்துக் கொடுத்திருப்பதற்கு மீண்டும் அவரைப் பாராட்டுகிறேன். ஆனால் அதிலும் ஒரு குறை இருக்கிறது; இப்போது கொடுத்திருப்பது ஆங்கிலத்திலே உள்ளதை தமிழிலே மொழிபெயர்த்துக் கொடுத்திருப்பதேயாகும். வருகிற ஆண்டு, எளிய—இனிய தமிழிலேயே எழுதித்தர வேண்டும்—அதுவும், நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் கைப்பட எழுதித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், பச்சையப்பன் கல்லூரியிலே பேசுகின்றபோது நிதி அமைச்சர் அவர்கள், தமிழ் மொழியைப் பற்றிப் பிரமாதமாகப் பேசியிருக்கிறார்; சட்டசபை உறுப்பினர்களைக் காட்டிலும் மாணவர்கள் தமிழில் அதிகம் பேசுகிறார்கள் என்றும், தானும் நன்றாகத் தமிழில் பேச முடியும் என்றும் கூறியுள்ளார்; அந்த நம்பிக்கையோடுதான் இதைக் கூறுகின்றேன்.”

தொடர்ந்து அவர் பேசினார்:—

“தென்னாற்காடு மாவட்டத்தில், கடந்த நான்காண்டு காலத்தில், முன்னேற்றமானதும், நன்மையானதுமான காரியங்களை ஆட்சியினர் செய்திருப்பதாகச் சொல்ல முடியாது; வேண்டுமானால், நிதி அமைச்சர் திறந்து வைத்த புதிய சில ஓராசிரியர் பள்ளிகளைக் குறிப்பிட்டுக் கூறக்கூடும்; அதைத் தவிர, வேறு எந்தவிதமான நன்மை அங்கு செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் கூறுமாறு துணிவுடன் கேட்கிறேன்.

“ஐந்தாண்டுத் திட்டத்தில், நான்காண்டுகள் கழிந்துவிட்டன; ஆயினும், புதிதாகப் பாதைகளோ, பாலங்களோ, சமூக நலத் திட்டத்தின்கீழ் அமைத்துள்ளார்களா? இல்லையே! சிதம்பரத்தில், ஒரு பகுதியிலுள்ள சில பிர்க்காக்களை மட்டும் சமுதாய நலத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டுள்ளார்களே தவிர, வேறு எந்த நன்மையையும் இதுவரையில் செய்ததாகத் தெரியவில்லை.

“நாட்டில், இன்று எங்கே ‘சோஷலிச அடிப்படை’த் திட்ட முறை நிலவுகிறது? இந்த நாட்டை விட்டு வெள்ளைக்காரர்கள் சென்றுவிட்டார்களே தவிர, பொருளாதாரத் துறையில் இன்றைக்கும் அவர்கள் சுரண்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள்; உதாரணத்திற்கு பாரி கம்பெனி, பென்னி கம்பெனிகளைக் கூறலாம்; அதைப் போலவே மற்றும் பல கம்பெனிகள் இருந்து வருகின்றன; இதை எல்லாம் தேசிய மயமாக்குவதற்கு சர்க்கார் முன் வரவில்லையே!

“நிலச் சீர்திருத்தம் செய்யப் போவதாகச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள்; ஆவடி மாநாட்டிலும் அதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன; ஆனால் இதைப்பற்றிய அறிகுறியே ஒன்றும் காணோம்.

“பின், வேறு எந்தத் துறையில் நாடு முன்னேறியிருக்கிறது? சென்னையை எடுத்துக் கொண்டால் வியாபாரம் பூராவும்—அதிலும், பட்டுத் துணி வியாபாரம் பூராவும் வடநாட்டார் ஆதிக்கத்தில் இருக்கிறது. இதற்கு அத்தாட்சியாக சைனுபசாரையும், மவுண்ட் ரோடிலுள்ள துணிக் கடைகளையும், தங்கம், வெள்ளி சாமான்கள் விற்கும் கடைகளையும் பார்த்தாலும் போதுமே! தவிர, வட்டிக் கடைகள் பூராவும் அவர்கள் கையில்தான் உள்ளது; இவ்வாறு பலவிதத்திலும் நம் நாட்டுப் பணத்தை வடநாட்டவர் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க முயற்சிக்கப்பட்டதா? இல்லையே! எங்கே ‘சோஷலிச அடிப்படை’ இருக்கிறது?

“இலட்சக்கணக்கான ரூபாயைச் செலவழித்து மாநாடு கூட்டி, பளபளப்பான உடைகளை அணிந்துகொண்டு, ‘சோஷலிசம்’ பற்றிப் பேசிவிட்டால் போதுமா? ஆவடி மாநாட்டில் பேசியது பூராவும் தேர்தல் பிரச்சாரத்திற்காகவே ஒழிய, உண்மையில் ‘சோஷலிச அடிப்படை’ பற்றியே அல்ல என்று திட்டவட்டமாகக் கூறலாம். நாங்களும் ‘சோஷலிச அடிப்படை’யை வரவேற்கிறோம்; ஆனால், அதற்கான அறிகுறியைக் கூடக் காணாதது கண்டுதான் வருத்தமுறுகிறோம்.

“வடநாட்டு ஆதிக்கத்தில் இருக்கக் கூடிய இலாகாவைச் சேர்ந்த குமாஸ்தாக்களின் சம்பளத்தை (அஞ்சல் நிலையம், வருமான வரி அலுவலகம் போன்றவை)யும், என் ஜி ஓ-க்களின் சம்பளத்தையும் ஒத்திட்டுப் பார்க்கையில், பெருமளவில் வித்தியாசம்காணப்படுகிறதே! ஏன் அந்த வித்தியாசம்? இந்த நிலைமையில், விவசாயிகள் பொது மக்கள் மீது வரி விதிக்க வேறு இந்த அரசாங்கம் முன்வந்திருப்பதுதான் விந்தையாகும்.

பல மாநிலங்களின் வரவு-செலவுத் திட்டத்தைப் பார்க்கும்போது, பற்றாக்குறையைச் சரிக்கட்ட அம்மாநில ஆட்சியினர் வரிபோட முன்வரவில்லை. ஆனால், இம் மாநிலத்தில் மட்டும் விவசாயிகளுக்கு மேலும் இரண்டணா வரி போடப்படுவதற்குக் காரணம் என்ன? இன்று அவர்கள் விலை வீழ்ச்சியின் காரணமாகவும், வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலைமையிலும் இருக்கின்றார்கள்.

“ஏழைகள் அதிகமாக உபயோகிக்கும் புகையிலைமீது வேறு வரி போடப்பட்டிருக்கிறது. நான் புகையிலை குடிப்பவனுமல்ல; சுவைப்பவனும் அல்ல. இருந்தபோதிலும், இந்த வரி, நாட்டிலுள்ள ஏழை மக்களை எந்த ஒரு நிலைக்குக் கொண்டுபோகும் என்பதை ஆட்சியாளர்கள் சிறிது சிந்திக்க வேண்டும். இந்த வருவாயை ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கொடுப்பதற்காகவே வசூலிக்கப்படுகிறது. அதற்காக, ஏழைகளிடமிருந்து காசு வசூலித்துக் கொடுக்க வேண்டும்? மோட்டார் வண்டிகள் மூலம் வரும் வருவாய் பூராவையும் ஏன் மாவட்டக் கழகங்களுக்குக் கொடுக்கக் கூடாது? கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது போலல்லவா நிதி அமைச்சருடைய இந்த வரித் திட்டம் அமைந்திருக்கிறது?

“இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தென் ஆற்காட்டில் உள்ள கோமுகி, மணிமுத்தாறு திட்டங்கள் இருப்பதாகச் சொன்னார்கள்; ஆனால் வரவு—செலவுத் திட்டத்தைப் பார்க்கும்போது அந்தத் திட்டங்கள் எங்கே போயிற்று என்பதே தெரியவில்லை.

“இன்றையத் தினம் எங்கு பார்த்தாலும் பாடசாலைகள் திறந்து வைக்கப்படுகின்றன; 2,800 பாடசாலைகள் இதுவரை திறக்கப்பட்டுள்ளதாகவும், இன்னும் 1,500 பாடசாலைகளைத் திறக்கப் போவதாகவும் கூறுகிறார்கள்; ஆனால் ஆயிரக்கணக்கான மக்கள் தொகையுள்ள பல கிராமங்களில் இன்னும் பாடசாலைகளே திறக்கப்படவில்லை. அப்படி வேண்டுமென்று கேட்டால், அது, ‘பள்ளிக்கூடமே அல்லாத வட்டாரமல்ல,’ என்றும் புறக்கணிக்கப்பட்டுவிடுகிறது.

“அரசாங்கத்தார் இப்போது புதிதாக ஓராசிரியர் பள்ளிகளை நிறுவி வருகிறார்கள்; இது நடைமுறைக்குச் சரியானதல்ல; இன்னும் நிறுவப் போவதாகவும் சொல்லுகின்றார்கள். 90 பிள்ளைகள் உள்ள ஒரு வகுப்பில், ஓராசிரியர் மட்டுமே எப்படி அவர்களுக்கு ஒழுங்காகப் பாடம் சொல்லித் தர முடியும்? வெறுமனே பிள்ளைகளை மடக்கி வைத்துக் கொள்ளத்தான் உபயோகப்படுவார்கள். இன்னும் 1,200 ஆசிரியர்களை நியமிக்கப் போவதாகவும் கூறுகிறார்கள்; 4,300 பாடசாலைகளுக்கு 1,200 ஆசிரியர்கள் போதுமா? பிள்ளைகள் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியரை நியமிக்க வேண்டும்—நிரந்தரமாக ஓராசிரியர் பள்ளியாக இருக்கக்கூடாது.

“இன்றையத் தினம் சமுதாய நலத் திட்டம் ஒரு சில குறிப்பிட்ட இடங்களுக்குத்தான் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது; தென்னாற்காட்டில் செஞ்சி, விக்கிரவாண்டி முதலிய பகுதிகளெல்லாம் மிக மிக பிற்போக்கான நிலையில் உள்ளன; அந்தப் பகுதிகளையெல்லாம் கட்டாயம் விஸ்தரிக்கவேண்டும்.

“இம் மந்திரி சபையில் என்னுடைய சமூகத்தைச் சேர்ந்த கனம் மாணிக்கவேலர், கனம் இராமசாமி படையாச்சி ஆகிய இரண்டு பேரும் இருக்கிறார்கள்; அவர்கள் இருப்பது சிலருக்குப் பொறுமையும் கூட! ஆனால், அவர்கள் ஒன்றும் செய்ய முடியாத சூழ்நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றனர். காரணம், ஏதாவது செய்தால் மந்திரி பதவி போய்விடுமோ என்ற பயத்தாலோ, என்னவோ, அவர்கள் இதுவரை ஒன்றும் செய்யவில்லை.”

கழகக் கூட்டம்

☆

புதூர்

11—3—55 வெள்ளி மாலை

பேசுவோர்:

என். வி. நடராசன்

ப. உ. சண்முகம்

சே. சுப்பிரமணியம்

திருமணம்

11—3—55 காலை 8 மணிக்கு, சென்னை, புளியந்தோப்பு, எண் 5-3, பார்த்தசாரதி நாயுடு தெருவில், தோழர் இராமகிருட்டிணன் தோழியர் லோகாம்பாள் திருமணம், தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெறும். தோழர்கள் முகவை ஆர். எஸ். பாண்டியன், மா. து. நித்தியானந்தம், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசுவர்.

செல்லப்பள்ளி இராஜா — வெற்றியின் எதிரொலி!

ஒரு கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினருக்கு இரண்டு ஏக்கர் நிலம் போச்சு!

குண்டூர், மார்ச் 8—

திவி தொகுதியில் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சி. இராஜேஸ்வர ராவும், காங்கிரஸ் சார்பில் செல்லப்பள்ளி இராஜாவும் தேர்தலில் போட்டியிட்டனர்.

‘கம்யூனிஸ்டு அபேட்சகர்தான் வெற்றி பெறுவார்,’ என இரண்டு ஏக்கர் நிலத்தை, கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த ஒருவர் பந்தயம் கட்டினார்.

‘கம்யூனிஸ்டு அபேட்சகர் தோற்றுப்போவார்; இராஜாதான் வெற்றி பெறுவார்,’ என காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் பதிலுக்கு இரண்டு ஏக்கர் நிலத்தைப் பந்தயமாகக் கட்டினார்.

தேர்தல் முடிவு தெரிந்தது; பந்தயம் கட்டிய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்தவர், ஒப்பந்தப்படி தனது இரண்டு ஏக்கர் நிலத்தை காங்கிரஸ்காரருக்கு மாற்றிவிட்டார்!

தற்போது இந்தியாவுக்குச் சொந்தமான கப்பல்களின் ஏற்றிச் செல்லக் கூடிய நிறை அளவு சுமார் 5 லட்சம் டன்னாகும்; இந்த அளவு, உலகக் கப்பல் நிறை அளவில் சுமார் ½ சதவிகிதமாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ, அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.